Registered as a News Pap[illegible]    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    தை 13    (27-01-1992)    திங்கட்கிழமை    ஓசை: 343

## மருந்து விலை நிர்ணயம்; வர்த்தகர் தன்னிச்சையான முடிவு

தனியார் ஆங்கில மருந்து வர்த்தகர்கள் விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைக்காமல் தன்னிச்சையாகவே மருந்துகளின் விலையை நிர்ணயித்து விற்பனை செய்கின்றார்கள் என்று பாவனையாளர் தரப்பில் சொல்லப்படுகிறது.

ஆங்கில மருந்து மொத்த விற்பனையாளர் தாங்கள் கொழும்பில் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க 20 வீதம் கூடுதலாக விற்கலாமென்றும், சில்லறை மருந்து வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யும் விலையிலும் பார்க்க 10 வீதம் விலைகூட்டி விற்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆங்கில மருந்து வர்த்தகர், தனியார் மருத்துவ சங்கப்பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் சந்திப்புக்குப் பிறகு (4ஆம் பக்கம் பார்க்க)

# 30 பொலிஸ், விமானப்படை பலி:

# கண்ணிவெடியில் பஸ் சிதறியது

## அம்பாறைமகாஓயா வீதியில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை - மகாஓயா வீதியில், நேற்றுக்காலை இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் சிறிலங்கா விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்த முப்பது பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் இதேவேளை காயமடைந்தவர்களை மீட்கச் சென்ற சிறிலங்கா விமானப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும் மோதல் மூண்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது. நேற்றுக்காலை 9.30 மணியளவில் மகா ஓயா அம்பாறை வீதியில், அறந்தலாவ 32ஆம் கட்டை என்னும் இடத்தில், இராணுவத்தினரையும், விமானப்படையினரையும் ஏற்றிச் சென்ற பஸ் வண்டியொன்று கண்ணி வெடியில் சிக்கியது. இக்கண்ணி வெடியில் சிக்கிய படையினரில் 30 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் வரையில் காயமடைந்தனர்: இவர்கள் அம்பாறை, பொலநறுவை, மகாஓயா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த விமானப்படை உயரதிகாரி ஒருவர் ஹெலிகப்டரில் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கும் போது இடையில் மரணமானார். மேலும் மூவர் அம்பாறை ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

இத்தாக்குதல் பற்றி கருத்து வெளியிட்ட சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் புலிகளே இத்தாக்குதலை நடாத்தியதாகத் தெரிவித்தன.

### மீட்கவந்த விமானபடையில் ஒருவர் பலி; 7 பேர் காயம்

(கொழும்பு)

அம்பாறை மகாஓயா வீதியில் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் மீட்பு வேலைக்கு விரைந்த விமானப்படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலில் விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஏழு பேர் காயமடைந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு விமானங்கள் மூலம் சத்திரசிகிச்சை நிபுணர்களையும், வைத்திய அதிகாரி (4ஆம் பக்கம் பார்க்க)

### கிராமசேவகர் அலவன்ஸ் அதிகரிப்பு

(கொழும்பு)

கிராமசேவையாளர்களின் அலவன்சுகள் அதிகரிக்கப்பட விருப்பதாக பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா கூறியுள்ளார். இதன்படி தமது எல்லைக்கு அப்பால் கடமை செய்வதற்காக இதுவரை வழங்கப்பட்ட 50 ரூபா அலவன்சு, 150 ரூபாவாக உயர்த்தப்படுவதாகவும், அலுவலக கடமைக்கான (4ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் தொண்டமானை

### பதவி விலக்குவதால் இனப்பிரச்சினை தீராது

- ஜோசப் மைக்கல் பெரேரா

(கொழும்பு)

'இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் திரு. தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகளில் நியாயமான விடயங்களே உண்டு. இந்த நிலையில் திரு. தொண்டமானை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றுவது என்பது இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பரிகாரமாகாது' இவ்வாறு கடற்றொழில், கடல்வள அமைச்சர் ஜோசப் மைக்கல்பெரேரா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவ (4ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதி சிவில் நிர்வாக

### இணைப்பதிகாரியாக ரட்னாயக்கா நியமனம்

(கொழும்பு)

வவுனியா மாவட்ட சிவில் இணைப்பதிகாரி ஈ. ஏ. வி. ரட்னாயக்க வடபகுதிக்கான சிவில் இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் காரியாலயம் அனுராதபுரத்தில் இயங்கும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

### புலிகளை பேச்சுக்கழைக்க பிரதமர் மந்திரம் செய்தாராம்

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்காக நாம் மந்திரம் செய்தும்கூட அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இணைத்துக்கொள்ளவே நாம் விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதே வேளை இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக பாரா

புலிகளின் காவலரணை

### தாக்க முயன்ற இராணுவம் புலிகள் கடும்மோதல்

ஒரு போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது தாக்குதலை மேற்கொண்ட சிறிலங்காஇராணுவத்தினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். இச் சம்பவம்நேற்றுமுன்தினம் முற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்றின் மீது தாக்குதலை மேற்கொண்ட சிறிலங்கா இராணு (4ஆம் பக்கம் பார்க்க)

### கெரில்லா பாணியில் இராணுவ நடவடிக்கை

-இரு போராளிகள் வீரச்சாவு

(நமது நிருபர்)

அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கும் கரந்தடி படையினரின் தந்திரோபாயம் ஒன்றை கையாண்டு வருகின்றனர். இந்த முறையில் நடத்தப்பட்ட இருதாக்குதல்களில் கடந்த 23ஆம் திகதி இரண்டு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் கடவெட்டி என்னும் இடத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் ரயில் பயணிகள் புனானையில் கணக்கெடுப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு ரயிலில் பிரயாணம் [illegible] களப்புச் செல்லும் ரயில் புனானையில் நீண்டநேரம் தடுத்து

# இணைப்பதிகாரியாக ரட்னாயக்கா நியமனம்

(கொழும்பு)

வவுனியா மாவட்ட சிவில் இணைப்பதிகாரி ஈ. ஏ. வி. ரட்னாயக்க வடபகுதிக்கான சிவில் இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் காரியாலயம் அனுராதபுரத்தில் இயங்கும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

# புலிகளை பேச்சுக்கழைக்க
## பிரதமர் மந்திரம் செய்தாராம்

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்காக நாம் மந்திரம் செய்தும்கூட அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இல்லை. இந்த நிலையில் நாம் என்ன செய்வது? இவ்வாறு சிறிலங்கா பிரதமர் திரு.டி.பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ளவே நாம் விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதே வேளை இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கை எடுத்துவரும் அதே சமயம் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொக்கட்டிச்சோலை படுகொலை; விசாரணைகள் முடிந்தன

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பான விசாரணைகள் கடந்த வியாழனுடன் முடிவடைந்தன.

கொக்கட்டிச்சோலையில் கடந்த யூன் மாதம் 12 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமை குறித்து விசாரிக்க சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் கொண்ட இந்த ஆணைக்குழுவின் விசாரணை கடந்த யூலை 29ஆம் திகதி ஆரம்பமாகியது.

மட்டக்களப்பிலும் கொழும்பிலுமாக முப்பத்திமூன்று தினங்கள் விசாரணைகள் நடைபெற்றன. 186 பேர் இந்த விசாரணைகளின் போது சாட்சியமளித்தனர்.

இந்த விசாரணையின்போது மட்டக்களப்பு இராணுவமுகாமிற்குப் பொறுப்பாக இருந்த சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் சத்தியப் பிரமாணம் செய்யாது சாட்சியம் அளித்தமையும் 17 சிறிலங்கா இராணுவத்தினர் சாட்சியமளிக்க மறுத்தமையும் தெரிந்ததே.

# கடவுச்சீட்டு அலுவலகத்தில் 13 தோ. தொழிலாளர் கைது

கடவுச்சீட்டுப் பெறுவதற்கு முயற்சி செய்த பதின்மூன்று தோட்டத் தொழிலாளர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மஸ்கெலியாமறே தோட்டத்தைச் சேர்ந்த இத்தொழிலாளர்கள் கடவுச்சீட்டு அலுவலகத்துக்குமுன் வரிசையாக காத்துநின்ற சமயமே பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மேற்படி தொழிலாளர்கள் கைது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து கைதிகள் அனைவரும் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில விடுதலை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

# மலையகத்தில்கைதானோர்; செஞ். விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

ஊவாமாகாணத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பான விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சேகரித்து வருகின்றது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களும் பெற்றோரும் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்படி நடவடிக்கையை எடுத்து வருகிறது. இதற்காக சர்வ

(4ஆம் பக்கம் பார்க்க)

லாவ 32ஆம் கட்டை என்னும் இடத்தில், இராணுவத்தினரையும், விமானப்படையினரையும் ஏற்றிச் சென்ற பஸ் வண்டியொன்று கண்ணி வெடியில் சிக்கியது. இக்கண்ணி வெடியில் சிக்கிய படையினரில் 30 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் வரையில் காயமடைந்தனர்: இவர்கள் அம்பாறை, பொலநறுவை, மகாஓயா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த விமானப்படை உயரதிகாரி ஒருவர் ஹெலிகப்டரில் கொழும்பிற்குக் ... ரியில் மரணமானார்கள்.

... தாகத் தெரிவித்தன.

# மீட்கவந்த விமானபடையில் ஒருவர் பலி; 7 பேர் காயம்

(கொழும்பு)

அம்பாறை மகாஓயா வீதியில் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் மீட்பு வேலைக்கு விரைந்த விமானப்படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலில் விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஏழு பேர் காயமடைந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு விமானங்கள் மூலம் சத்திரசிகிச்சை நிபுணர்களையும், வைத்திய அதிகாரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம் ஆட்டம் காணும்; சமரசமுயற்சியைக்கைவிடுக

## தொண்டாவிற்கு பிரபல பத்திரிகையாசிரியர் ஆலோசனை

இலங்கைத் தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்குமிடையே பூர்வீகத்திலேயே பாரிய பிளவுண்டு. வடக்கு கிழக்கு பிரச்சினைகள் பற்றி அமைச்சர் தொண்டமான் பேச முற்பட்டுள்ளதால் புலிகளின் செல்வாக்கு மலையகத்திற்கும் பரவக்கூடும். வடக்கு கிழக்குடன் மலையகப் பகுதியிலும் நெருக்கடிகள் அதிகரித்தால் அரசாங்கம் ஆட்டம் காணும் ஆபத்து அதிகமாகும் என்பதையுணர்ந்து அமைச்சர் தொண்டமான் தமது திட்டங்களை கைவிடவேண்டும் என்று பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு எழுதிய கடிதமொன்றில் பிரபல பத்திரிகையாளரான மேர்வின் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிடுகையில் மலையகத்திலும் வடக்கு, கிழக்குப் போல ஆயுத நடவடிக்கைகள் அதிகரிப்பின் அரச லோ இராணுவத்தாலோ கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்பதுடன், பொருளாதார ரீதியாகவும் பலத்த பின்னடைவைச் சிறிலங்கா சந்திக்க நேரிடும் எனவும் அண்மைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சீனன்குடா தளத்திற்கு 30 வெடி குண்டு நிபுணர்கள்

திருக்கோணமலை சீனன்குடா விமானத்தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் சேதமடைந்த பகுதிகளை துப்பரவாக்குவதில் விசேட வெடிகுண்டு நிபுணர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

30 பேர் கொண்ட இவ்வெடிகுண்டு நிபுணர்கள் குழுவினர் விமானத்தளப்பகுதியை துப்பரவாக்குவதிலும் பரிசோதனைகளை நடாத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ் விமானத்தளமும், சுற்றுப் பகுதியும் எவரும் நடமாட முடியாதபடி தடைசெய்யப்பட்டிருக்கிறது. விமானத்தளப் பகுதியில் வெப்பநிலை உயர்வாகக் காணப்படுகின்றது.

அதே வேளை மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்காக 15 உயர் அதிகாரிகள் உட்பட மொத்தம் 45 அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்று திருமலைக்குச் சென்றிருப்பதாக விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

## துப்பாக்கிப் பிரயோகம்

மண்டைதீவு கடற்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக்காலை பண்ணைப்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நேற்று முன் தினமும் இப்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

# இராணுவ நடவடிக்கை -இரு போராளிகள் வீரச்சாவு

(நமது நிருபர்)

அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கும் கரந்தடி படையினரின் தந்திரோபாயம் ஒன்றை கையாண்டு வருகின்றனர். இந்த முறையில் நடத்தப்பட்ட இருதாக்குதல்களில் கடந்த 23ஆம் திகதி இரண்டு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் கடவெட்டி என்னும் இடத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் ரயில் பயணிகள் புனானையில் கணக்கெடுப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு ரயிலில் பிரயாணம் செய்யும் தமிழர்கள் புனானை ரயில் நிலையத்தில் வைத்து எண்ணிக் கணக்கெடுக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புச் செல்லும் ரயில் புனானையில் நீண்டநேரம் தடுத்து வைக்கப்படுகிறது. ஒவ்வொரு பெட்டியினுள்ளும் சிறிலங்கா இராணுவத்தினர் சென்று தமிழ் பிரயாணிகள் அனைவரையும் எழுந்து நிற்கச் செய்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழ் அகதிகள் விவகாரம்

# ஐ. நா. அக. தூதுவராலய முயற்சிக்கு இந்தியா தடை

இலங்கை திரும்பும் தமிழகத்திலுள்ள தமிழ் அகதிகள் தாமாகவேமுன்வந்து இலங்கை திரும்புவதை உறுதிப்படுத்த ஐ. நாவுக்கான அகதிகள் தூதுவராலயம் எடுக்கும் முயற்சிக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதனாலேயே இலங்கை திரும்பும் அகதிகள் விவகாரத்தில் ஐ. நா. அகதிகள் தூதுவராலயத்தின் பங்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை வந்த அகதிகள் பாதுகாப்பு கேள்விக்குரியது

## பி.பி. ஸி. கருத்து

(லண்டன்)

திருக்கோணமலைக்கு கொண்டுவரப்பட்ட தமிழ் அகதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் பாதுகாப்பு அதிகாரிகளின் வார்த்தைகள் நடைமுறையில் செயற்படுத்தப்படுமா என்பது ஐயத்திற்குரியதே என பி. பி. ஸியின் சிங்களசேவை நேற்றிரவு கூறியது

இவ்விடயம் பற்றி அதுமேலும் கூறுகையில் ஏற்கனவே இலங்கையில் ஆறு இலட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் தற்போது தமிழகத்திலிருந்து கொண்டு வரப்படுவோர் தமது சொந்த இடங்களில் சென்று குடியேறுவது தற்போதைக்குச் சாத்தியமற்றது என்பதால் அவர்களுக்கு நிவாரணம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் அரசாங்கம் சிக்கல்பட நேரிடும் எனவும் குறிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? கொழும்பில் மந்திராலோசனை

(கொழும்பு)

இனப்பிரச்சினை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கை என்னஎன்பது பற்றி கொழும்பில் அரச இராணுவ வட்டாரங்களில் தீவிர மந்திராலோசனை நடைபெற்று வருவதாக தெரியவருகிறது. அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளை ஆராயும் பொறுப்பினை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கையளிப்பதென்றும், அந்தக் கால இடைவெளிக்குள் இராணுவ நடவடிக்கைகளை தீவிரபபடுத்துவதெனவும் ஆராயப்படுவதாகநம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

தொண்டமானின்சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டஅரசாங்கம்பாராளுமன்றத்தெரிவுக் குழுவிற்கு முதலுரிமைகொடுத்து, இனப்பிரச்சினைக்கு சகல அரசியல் கட்சிகளினதும் கருத்தொருமைப்பாட்டை திரட்டுவதே அரசியல் நோக்கமாகத் [illegible]

இதற்கென காலக்கெடு ஒன்றையும் அரசு நிர்ணயித்துள்ளது. இந்தக் காலகட்டத்திற்குள்வட கிழக்கில்இராணுவநடவடிக்கைகளை முடுக்கி விட்டு புலிகளைப் பலவீனப்படுத்தலாமென அரசு நம்புவதாகத் தெரிகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 90ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும்

வீரஜனனம்
1975 - 11 - 04

வீரச்சாவு
1991 - 10 - 31



### வீரவேங்கை இளங்கிரன்

(பத்மநாதன் றஜீவன்)

(தையிட்டி)

சிறிதளவும் சுயநலமில்லா முன் உதித்த மகனே - நீ
சொல்லில் அல்ல செயலில் என்பாய்
புறப்பட்டாய் ஆனையிறவுக் களத்திற்கே - நீ
புலிப்படையின் சிறப்புப் படைப்பிரிவில்
கண்ணீரை மறந்தனவே எம் கண்கள் - நீ
களத்தில் காட்டிய வீரத்தின் கதைகேட்டு
குளிருதடா எம் நெஞ்சம் கண்மணியே - நீ
மண்மாதா மடியினிலே மலராகிப் போனாயே!
கண்மணியே உம்பாதம் எம் கண்மலர் தூவி
சமர்ப்பிக்கின்றோம் அஞ்சலியை.

நாளை 28-01-1992 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் சகபோராளிகள், இயக்க உறுப்பினர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி வடக்கு, -குடும்பத்தினர்
தர்சினி வீதி, புலவளை.
(சி/3837)

## வரி விளம்பரம்

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி 1992 - 02 - 01 சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. க. பொ. த. (சா/த) சித்தியடைந்தமை கடைசித் தகைமையாகும். நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. உயர் கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2151)

### ஆதாரங்காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 22 ஆம் திகதி ஊரியான் முத்திரைச்சந்தி சேவையில் ஈடுபட்ட மினிபஸ்ஸில் பயணஞ்செய்த பிரயாணி ஒருவரால் தவற விடப்பட்ட ஒரு தொகைப்பணம் சிற்றூர்தி உரிமையாளர் வ. சண்முகம் அவர்களால் முத்திரைச்சந்தி போக்குவரத்துப் பிரிவுக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி மேற்படி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### கோழிகளுக்கு இலவச தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய கோவிலுக்கு அருகிலுள்ள கிறீன் பீல்ட் சன சமூக நிலையத்தில் நாளை 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு கோழிகளுக்கு இலவசமாக நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படும். இத் தகவலை யாழ் அரச கால்நடைவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தடுப்பு ஊசி செலுத்துவதன் மூலம் கோழிகளை நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள

நாடுங்கள்

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
யாழ்ப்பாணம்.

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ இரவு 10 மணிவரை அச்சுவேலைகள் ஏற்கப்படும்.

இ. 5

## வடமராட்சி கிழக்கு
## ப. நோ. கூ. சங்கம் மருதங்கேணி

# பதவி வெற்றிடம்

பதவி : கணக்காளர் 104/10

சம்பள அளவுத்திட்டம் : $\frac{1305 — 2005}{40 \times 5 — 50 \times 10}$

(அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 23 - 45 வருடங்கள்

கல்வி மற்றும் தகைமைகள் :

அ. கூட்டுறவுப்பணியாளரின் 9 ஆவது சம்பளத்திட்டத்தின் க/கு பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் க/கு பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப்பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையிலான மேற்பார்வைமட்டத்தில் 02வருடங்களுக்குக்குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டப்பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூ. ப. தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/ எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



27- 7- 91 ஆனையிறவில் ஆகாய கடல்வெளிச் சமரில் வீரச்சாவடைந்த

### கப்டன் சிவம் (பவான்)

(திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன்)

வீரஜனனம்
3- 1- 1972

வீரச்சாவு
27- 7- 1991

குலத்தின் ஒளிவிளக்காய் குடும்பத் தலைமணியாய்
பலத்தின் விளைநிலமாய் பண்பின் தனியுருவாய்
பாசத்தி னிருப்பிடமாய் பரிவின் கொழு கொம்பாய்
நேசத்தின் தனிவடிவாய் நேர்மைக் குறைவிடமாய்
அன்பின் உயிர்நிலையாய் ஆளுமையா லுயர்மலையாய்
இன்பின் ஒளிமுகத்தா லேற்ற வுறுதுணையாய்
நாட்டுக் கரணாகி நங்க ளெதிரிகளின்
கூட்டுக்கோர் கூற்றுவனாய் குன்றா விறற்புலியாய்
வாழ்ந்தெம் தமிழீழ மாதா திருவடிக்கண்
ஆழ்ந்த பற்றினோடு அருகிருந் தின்பமுற
நெல்லைநாத எமைவிட்டு நீமறைந் திட்டாலும்
வல்லநின் மலர்முகம் வாழுமெம் இதயத்தே!
யுகபோ ராயிரந்தா னோடி மறைந்தாலுமுன்
முகவெளி யென்றுமெம் மகத்தளியி லொளிருமே!

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

தி. நெல்லைநாதன் வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி.
(சி/3846)


## முதலாம் ஆண்டு வீர அஞ்சலி



நினைவு கூருகின்றோம்

கொள்ளப் படுகின்றனர்

# முதலாம் ஆண்டு வீர அஞ்சலி



முல்லைத்தீவு மாவட்டத் தளபதி

## மேஜர் காந்தன்

### வீரசிங்கம் - திலீப்குமார் (திருமலை)

வீரஜனனம்
06-08-1971

வீரச்சாவு
27-01-1991

தாயக மண்ணிலே தமிழனின் உரிமையை
பேரின வாதிகள் மறுத்த நாள் முதல்
சிறுத்தையாய் மாறி பெருத்தோர் விடுதலை
சரித்திரம் காணவே செருக்களம் நாடினான்!

பாரிலே பாசறை எங்கும்
பேரிகை கொண்டு போர்க்கொடி தூக்கினான்
மணலாறு தன்னிலே மக்களைக் காக்கவோர்
மாபெரும் போர் செய்து மாவீரனாகினான்!

பிள்ளைத் தமிழ் காக்க பெரும்களம் கண்டவன்
பிணமாகி மண்ணிலே பேசாது கிடக்கிறான்
தாயகம் காக்க தேரிலே வந்தவன் - இன்று
தன்னுயிரிழந்து பாடையிலே போய்விட்டான்!

கொண்ட கொள்கைகள் குன்றிடா மன்னனின் கொள்கைப் பாதையில் உரிமையை நாட்ட காந்தனுடன் களம் கண்ட புதுக்களத்தான் புத்தா, உடன் சீறி எழுந்து சிலங்கொண்ட றஞ்சன், இன்று விடுதலைக்குத் துணைநின்ற மதுவன் ஆகிய வேங்கை முதல் தீயுடன் சங்கமமாகிய நானகு மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

இவர்களின் பிரிவால் வாடும்
அம்மா, சகோதர சகோதரிகள்,
அத்தான்மார், நண்பர்கள்.

புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.
தமிழீழம்.

(2127)

அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப்பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையிலான மேற்பார்வைமட்டத்தில் 02வருடங்களுக்குக்குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்சப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டப்பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூ. ப. தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/ எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர் வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், மருதங்கேணி, தாளையடி என்ற விலாசத்திற்கு 10-02-1992 க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

வடமராட்சி கிழக்கு
ப. நோ. கூ. ச.,
மருதங்கேணி.

(சி/3849)

# பிறந்த நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
27-01-1969

தமிழ் அன்னை மண்ணில்
05-02-1991

## மேஜர் சலீம்

### (அல்போன்சஸ் ஜோன் பிறின்ஸ்ரன்)

எம் குல விளக்கே! நீ பிறந்த நாளில்
உன் நினைவுகளால் அஞ்சலி!
வானில் செல்லும் வண்ணப் பறவைகளிடமா?
வான் வீதியில் வலம் வரும் வெண்நிலவிடமா?
கானகம் விரையும் காற்றிடமா?
கலைந்தோடும் வெண் முகிலிடமா?
எதனிடத்தில் உன் அஞ்சலியை
சொல்லி விடட்டும்!

உன்னை மறவாத
அம்மா, சகோதர சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்

(2150)

வாழ்ந்தெம் தமிழ்ழ மாதா திருவடிக்கண்
ஆழ்ந்த பற்றினோடு அருகிருந் தின்பமுற
நெல்லைநாத எமைவிட்டு நீமறைந் திட்டாலும்
வல்லநின் மலர்முகம் வாழுமெம் இதயத்தே!
யுகபோ ராயிரந்தா னோடி மறைந்தாலுமுன்
முகவெ ளி யென்றுமெம் மகத்தளியி லொளிருமே!

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

தி. நெல்லைநாதன் வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

(சி/3846)

# நினைவு கூருகின்றோம்...

**1992-01-27**



மேஜர் காந்தன்

1986 ஆம் ஆண்டு குச்சவெளியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு வவுனியா மன்னார் வீதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த

**மோகன்** (சோமசுந்தரம் விமலதாஸ் - ஓமந்தை, வவுனியா)

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு வெடிவைத்த கல்லுப் பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து சுட்டதில் வீரச்சாவெய்திய
முல்லைத்தீவு மாவட்டத் தளபதி

**மேஜர் காந்தன்** (வீரசிங்கம் திலீப்குமார் - திரியாய், திருக்கோணமலை)

**கப்டன் புத்தா** (முருகன் சந்திரகுமார்-கொழும்பு)

**லெப். ரஞ்சன்** (செல்வராஜா சுகுணதாஸ் - ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

**மதுவன்** (கனகசபை கருணாநிதி - கொக்கிளாய் மணலாறு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**

**மக்கள் முன்னணி**

(சி/3845)

### சிந்தனைக்கு

உண்மையில் ஒருமைப்பாடு நிலவுமாயின்,
கடுமையான சோதனையிலும் அது முறிவு
இன்றி நிலைத்து நிற்கும்
-மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 27-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## ஒருங்கிணைந்த கருத்து பிரேமாவின் ஏமாற்று

"இனப்பிரச்சினைக்கு நாட்டில் குழப்பத்தை விளைவிக்கக் கூடிய ஒருதலைப்பட்சமான தீர்வு எதையும் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை'' இவ்வாறு நேற்று முன்தினம் புத்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சிறிலங்கா ஜனாதிபதியின் இக்கூற்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று இவர் காலத்தில் எட்டப்பட முடியாத ஒன்று என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குக் கடந்த காலத்திலும், சில சிங்கள அரசியற் தலைவர்கள் முயற்சி செய்தார்கள். அவர்களும் எதிர்க் கட்சியாளரின் எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்கினர். திரு பண்டாரநாயக்கா முயன்றபோது ஐக்கிய தேசியக்கட்சியினர் எதிர்த்தனர். டட்லிசேன நாயக்கா முனைந்த போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்த்தனர். இதனால் முயற்சிகள் கைகூடவில்லை. ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டன.

இந்தநிலையில் தற்பொழுது ஜனாதிபதி பிரேமதாசா ஒருங்கிணைந்த கருத்து ஒன்றின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்கிறார். ஆனால் இது நடைமுறைச் சாத்தியமற்றது. காலத்தை இழுத்தடிப்பதற்காகச் செய்யப்படும் தந்திரம். சர்வ கட்சி மாநாடு கூட்டப்பட்டபோதும் ஒருங்கிணைந்த கருத்தைத் திரட்டுவதற்காகவே செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது சுமார் இரண்டரை வருடங்களின் பின்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றது. 11 கட்சிகளும் பல பொதுஸ்தாபனங்களும் தமது தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளன. சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களைத் தெரிவுக்குழு பரிசீலனைக்கு எடுக்கத் தொடங்கியுள்ளது. மூன்று மாதங்களுக்குள் தமது சிபார்சை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கவுள்ளது.

ஆனால், இப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பாராளுமன்றத்தில் 85 வீதத்திற்கும் அதிகமான ஆசனங்களை வைத்திருக்கும் இருபிரதானகட்சிகளான ஐக்கியதேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை.

அதுமாத்திரமல்லாமல், அமைச்சர் தொண்டமான் வைத்த தீர்வுத் திட்டம் குறித்து பெரும் சர்ச்சையிலும் ஈடுபட்டுள்ளனர். அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைத் தாம் நிராகரித்து விட்டதாக

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

புத்தபெருமான் காருணியத்தைப் போதித்தார். கொல்லாமையைப் போதித்தார். அன்பையும் அறத்தையும் தர்மத்தையும் போதித்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துமத ஞானியாகிய புத்தரின் போதனைகள் சிங்கள தேசத்தின் வேதமாக மாறியது. அரசமரம் அங்கு வேர்விட்டு வளர்ந்தது. புனித மதமாக பௌத்தம் அங்கு நிலை கொண்டது.

மனுநீதியின் தத்துவப் பொக்கிஷமான பௌத்த மதத்தில் காலப்போக்கில் பேரினவாத விஷம் கலக்கப்பட்டது. மகாவம்ச காலத்திலிருந்தே தமிழ்த்துவேசம் சிங்கள பௌத்த வரலாற்று ஏடுகளில் புகுத்தப்பட்டது, புத்தரின் அறநெறி தத்துவங்களுக்கு வியாக்கியானம் செய்ய விழைந்த மத குருக்கள் அதில் புராணக் கதைகளை புகுத்தினர். இனவாதக் கருத்துருவங்களைத் திணித்தனர் தமிழர் விரோத எண்ணங்களை கற்பித்தனர்.

இலங்கைத்தீவு பௌத்தத்திற்கென படைக்கப்பட்ட புனிதபூமி; சிங்களவரின் தாயகம். தமிழர்கள் அந்நியர்கள்; சிங்களவரின் புனித பூமியை ஆக்கிரமித்து நிற்பவர்கள். சிங்களவர்கள் அதியுயர்ந்த ஆரிய குலத்தவர்; தமிழர்கள் தாழ்ந்த திராவிடர்கள். சிங்களவர்கள் நாகரிகமானவர்கள்; தமிழர்கள் காட்டுமிராண்டிகள். சிங்களவர்கள் ஆளப்பிறந்தவர்கள்; தமிழர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள். இப்படியான சிங்களப் பேரினவாதக் கருத்துக்கள் பௌத்த வேதாகமங்களில் புகுத்தப்பட்டது. பௌத்தம் சிங்களப் பேரினவாதத்துடன் கலந்து களங்கமடைந்தது. புத்தரின் தர்மக் கோவிலுக்குள் அதர்மப் பிசாசு புகுந்து கொண்டது.

காலனித்துவ சகாப்தத்தில், குறிப்பாகஆங்கிலேயர்ஆட்சிக்காலத்தில் சிங்கள-பௌத்த பேரினவாதம் அரசியல் களத்தில் பிரவேசித்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியப் பூதமும், திராவிடக் காட்டுமிராண்டிகளுமாகச் சேர்ந்து சிங்கள இனத்தை அடக்கி ஆளுவதாக குரல் எழுப்பியது. அந்நியரின் ஆதிக்கத்தால் சிங்களவரின் புனித பூமி அழுக்குப்படிந்துவிட்டதாகஆத்திரப்பட்டது.

ஆங்கிலேயரின் வெளியேற்றத்தின் பின் இலங்கையின் அரசியல்வாழ்வை ஆட்டிப்படைக்கும் ஆதிக்க சக்தியாக சிங்களப்பேரினவாதம்வளர்ச்சி கண்டது. மதபீடங்களிலிருந்து கல்விக் கூடங்களிலும் கட்சி அரசியலிலும் ஊடுருவி வளர்ந்தது. சிந்தனையரங்கிலிருந்து சித்தாந்த உலகிலிருந்து திண்ணியமான நிறுவனமயம் பெற்றது. சிங்களப் பேரினவாதத்தின் பேயுருவங்களாக அரசியல் அமைப்புகள் வடிவம் எடுத்தன. அரசியல்வாதிகளும் இனவாதத்தால் ஆட்டப்படும் பொம்மைகளாக மாறினர்.

சிங்கள இனவாதத்தின் பேரெழுச்சி தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையை வலுப்படுத்தியது. சிங்கள தமிழ் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாட்டை முற்றச்செய்தது. தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை முனைப்புறச்செய்தது.

தமிழீழ மக்களின் அரசியல்போராட்ட வரலாற்றில், காலத்திற்குக் காலம் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் காணப்பட்ட போது, சிங்கள - பௌத்த பேரினவாதம் தலைதூக்கி அதற்கெல்லாம் ஆப்புவைத்து விடுவது தொடர்ந்து நடைபெறும் சரித்திர நிகழ்வு. பண்டா - செல்வா ஒப்பந்தத்திலிருந்து தொண்டமானின் சமரச முயற்சிவரை சிங்களப் பேரினவாதம் இந்தக் காரியத்தை தவறாது செய்துவருகிறது. எனவே இந்த கசப்பானவரலாற்று அனுபவத்தை பெற்றுக்கொண்ட எமது மக்களுக்கு இன்று தென்னிலங்கையில் தலைவிரித்தாடும் இனவாதம்ஆச்சரியத்தைக்கொடுக்கப்போவதில்லை.

திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் பகிரங்கப்படுத்தப் பட்டதுமே சிங்கள பௌத்த பீடம் போர்க்கொடியை உயர்த்தியது. சிங்கள இனவாத சக்திகள் தமிழ்த்துவேசத்தைக் கக்கின. சிங்கள அரசியல்வாதிகள் கூச்சல் போட்டனர்.

ஜனாதிபதி பிரேமதாசா, திருமதி பண்டாரநாயக்கா, அநுரா, தினேஷ் குணவர்த்தனாமற்றும் ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், எதிர்க் கட்சித்தலைவர்கள்ஆகியோருடன் கலந்தாலோசித்து, கருத்துப் பரிமாறி, அவர்களது ஆலோசனை கேட்டு, அனுசரணையைப்பெற்று,எல்லோரது கருத்து ஒத்திசைவுக்கு ஏற்ப இந்தத் தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதாகதிரு.தொண்டமான் எமக்கு எழுதியிருந்தார். அப்படியிருந்தும் அவர் வகுத்த திட்டத்திற்கு சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து இத்தகைய கடும் எதிர்ப்பு எழுந்தது ஏன்?

தமிழரின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு திரு. தொண்டமான் தமிழீழத்தனியரசைப் பரிந்துரைக்கவில்லை ஒற்றையாட்சியை மாற்றியமைக்க வேண்டுமெனக்கேட்கவில்லை. சமஷ்டி அமைப்பைத்தானும் கோரவில்லை. யுகம் யுகமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த வரலாற்றுப் பிரதேசத்தில் அவர்களுக்கு ஓரளவு சுயாட்சியுரிமை கொடுபட வேண்டும் என்ற கருத்தில் ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைத்தார். இதற்குத்தான் இத்தகைய எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

பௌத்த மதபீடம் போர்க் கொடி உயர்த்தி விட்டது. அதனால் தாங்களும் அந்தப் போர்க் களத்தில் குதித்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சிகளும் திரு. தொண்டமானின் திட்டத்தை எதிர்க்கவில்லை. தமிழரின் இரத்தத்தில் வேரூன்றிவளர்ந்த பேரினவாதம் கட்சி வேறுபாடின்றி சிங்கள அரசியலில் ஆழமாக வேரூன்றி விட்டதையும், மதம், அரசியல் என்று எல்லைக் கோடுகளை மீறி இனவாதம் பரவலான நிறுவனமயமாக்கப்பட்டிருக்கின்றது என்பதையுமே சிங்களஅரசியல் வாதிகளின் இந்தப் போக்கு சித்திரித்துக்காட்டுகிறது

திரு. தொண்டமானின் சமரச முயற்சிக்கும் அவரது தீர்வுத் திட்டத்திற்கும் பிரேமதாசாவின் ஆசீர்வாதம் கிடைத்திருக்கலாமெனக் கருதுவது தவறு. பிரேமதாசாவினதும் ஆளும் கட்சியினதும் அனுசரணை பெற்ற தீர்வுத் திட்டத்திற்கு பௌத்த பீடம் இத்தகைய எதிர்ப்பைக் கிளப்பியிராது

பிரேமதாசா பௌத்தபீடத்தின் தீவிர ஆதரவாளர் பௌத்த சாசனத்தின் பாதுகாவலர். பௌத்த கோட்பாடுகளை அரசியல் பிரமாணங்களாக மாற்ற முயல்பவர் தினமும் பௌத்த ஆலயங்களுக்குச் சென்று பிரித் ஓதுபவர். பௌத்த குருமாரின் காலடியைப் பூசிப்பவர். மதமும் அரசியலும் சங்கமமாகிய நீரோட்டத்தில் குளிப்பவர். அப்படியான ஒரு சிங்கள - பௌத்த தலைவரின் ஆசிபெற்ற ஒரு தீர்வுத் திட்டத்தை பௌத்த பீடம் இப்படி வெறிகொண்டு எதிர்த்திராது

திரு. தொண்டமானின் சமரச முயற்சிக்கு பிரேமதாசாவின் ஆசீர்வாதம் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. பௌத்த பீடத்தின் எதிர்ப்பிற்கு பிரேமதாசா ஆசி வழங்கியிருக்கலாம் எனத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. மல்வத்தை மகாநாயக்கரை பலாலிக்கு அனுப்பி இராணுவத்தினருக்கு ஆசி வழங்கக் கேட்டுக் கொண்ட பிரேமதாசா தொண்டமானின் சமாதான முயற்சிக்கு எப்படி ஆசி வழங்குவது? கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெற்ற பொழுது எந்த உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காமல் பிரேமதாசா காலத்தைக் கடத்திக் கழித்துவந்தார். கலந்தாலோசனை, கருத்தொற்றுமை, விட்டுக்கொடுப்பு என்ற தத்துவத்தைப் பேசி வந்தாரே தவிர தமிழரின் பிரச்சினைகளைப் பேசவில்லை அந்த நேரத்தில் புலிகளின் கோரிக்கைக்கு மாகாணசபை தேர்தலை நடத்தக்கூட அவர் முன் வரவில்லை.

மற்றவர்கள் மூலமாக தனது கருத்துக்களைத் தெரிவிப்பதில் பிரேமதாசா ஒரு வித்தகர். அப்பொழுது அமைச்சர் ரஞ்சனும், இப்பொழுது மகாநாயக்க தேரர்களும் பிரேமதாசாவின் மொழியில் பேசுகிறார்கள்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் அமைச்சர் அவையில் விவாதிக்கப்படவில்லை. ஆளும் கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் பேசப்படவில்லை. தனி நபரின் முயற்சிகளுக்கு தடைவிதித்து விட்டு பல தரப்பினரின் கருத்தொற்றுமை மூலமே இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது

இனப் பிரச்சினை பற்றிய தீர்வுகளை ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் ஆளும் கட்சியே ஆட்சி புரிகிறது இங்குதான் திரு தொண்டமானின் தீர்வுத் திட்டத்திற்கு இறுதியான ஆப்பு வைக்கப்பட்டது. பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் வெளியே பேசப்படக்கூடாது, பகிரங்க விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொண்டமானின் சமாதான முயற்சிக்கான கதவுகளை மூடிவிட்டது. எனவே இந்த சமரச முயற்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டதற்கு பிரேமதாசா அரசே காரணகர்த்தா என்று திடமாகச் சொல்லலாம்.

தமிழீழ மக்களுக்கு ஒரு குறைந்தபட்ச சுயாட்சியை வழங்கத் தானும் சிங்கள தேசம் தயாராக இல்லை திரு. தொண்டமானின் சமாதான முயற்சியும், அதற்கு எதிராக வெடித்த சிங்களப் பேரினவாத எழுச்சியும் இந்த அரசியல் உண்மையைப் புலப்படுத்தியிருக்கிறது

நீண்டநெடுங்காலமாகதமிழ் மக்கள் சிந்திய இரத்தமும் கண்ணீரும், அவர்கள் அனுபவித்த தாங்கொணாத் துயரும், சிங்களப் பேரினவாதிகளின் மனதிலும் உணர்விலும் எவ்வித மாற்றத்தையும் கொண்டு வரவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

(முற்றும்)

அன்ரன் பாலசிங்கம்

## மத்திய கிழக்கு பிரச்சினைக்கு

## சுவிட்சர்லாந்தில்

...பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றது. 11 கட்சிகளும் பல பொதுஸ்தாபனங்களும் தமது தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளன. சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களைத் தெரிவுக்குழு பரிசீலனைக்கு எடுக்கத் தொடங்கியுள்ளது. மூன்று மாதங்களுக்குள் தமது சிபார்சை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கவுள்ளது.

ஆனால், இப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பாராளுமன்றத்தில் 85 வீதத்திற்கும் அதிகமான ஆசனங்களை வைத்திருக்கும் இருபிரதானகட்சிகளான ஐக்கியதேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை.

அதுமாத்திரமல்லாமல், அமைச்சர் தொண்டமான் வைத்த தீர்வுத் திட்டம் குறித்து பெரும் சர்ச்சையிலும் ஈடுபட்டுள்ளனர். அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைத் தாம் நிராகரித்து விட்டதாக அறிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என வற்புறுத்துகின்றது. அரசாங்கம் தொண்டமானின் தீர்வுத் திட்டத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என மறுத்த போதிலும் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டும் என்பதை வற்புறுத்தவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி விரும்புகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியோ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை எனப் பிரசாரம் செய்கிறது. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி தனது நிலைப்பாட்டை மறைத்து வருகின்றது.

இந்நிலையில் அதாவது பிரதான இரண்டு கட்சிகளும் தீர்வுத்திட்டத்தை முன்வைக்காமலும், வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை நிராகரித்தும்; ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கையில் உதிரிக் கட்சிகளினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்விற்கு சிபார்சு செய்வதனால் எதுவித பலனும் ஏற்படப் போவதில்லை.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் யோசனைகளை முன் வைக்காத நிலையில், சிறிலங்கா ஜனாதிபதி கூறுவது போல் பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் எவ்வாறு ஒருமித்த கருத்தைத் திரட்ட முடியும்? அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்தை எவ்வாறுஒருமித்த கருத்து எனக் கொள்ள முடியும்? இதனால், எவ்வாறு இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்? யாரை ஏமாற்றப் பார்க்கின்றார்கள் இந்த இரு பெரும் சிங்களக் கட்சிகளும்.

...பேரினவாதம் அரசியல் களத்தில் பிரவேசித்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியப் பூதமும், திராவிடக் காட்டுமிராண்டிகளுமாகச் சேர்ந்து சிங்கள இனத்தை அடக்கி ஆளுவதாக குரல் எழுப்பியது. அந்நியரின் ஆதிக்கத்தால் சிங்களவரின் புனித பூமி அழுக்குப்படிந்துவிட்டதாகஆத்திரப் பட்டது.

ஆங்கிலேயரின் வெளியேற்றத்தின் பின் இலங்கையின் அரசியல்வாழ்வை ஆட்டிப் படைக்கும் ஆதிக்க சக்தியா... தீர்வுத் திட்டம் பகிரங்கப் படுத்தப் பட்டதுமே சிங்கள பௌத்த பீடம் போர்க் கொடியை உயர்த்தியது. சிங்கள இனவாத சக்திகள் தமிழ்த்துவேசத்தைக் கக்கின. சிங்கள அரசியல்வாதிகள் கூச்சல் போட்டனர்.

ஜனாதிபதி பிரேமதாசா, திருமதி பண்டாரநாயக்கா, அநுரா, தினேஷ் குணவர்த்தனாமற்றும் ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், எதிர்க் கட்சித்தலைவர்கள்ஆகியோருடன் கலந்தாலோசித்து, கருத்... மானின் திட்டத்தை எதிர்க்கவில்லை. தமிழரின் இரத்தத்தில் வேரூன்றிவளர்ந்த பேரினவாதம் கட்சி வேறுபாடின்றி சிங்கள அரசியலில் ஆழமாக வேரூன்றி விட்டதையும், மதம், அரசியல் என்று எல்லைக் கோடுகளை மீறி இனவாதம் பரவலான நிறுவனமயமாக்கப்பட்டிருக்கின்றது என்பதையுமே சிங்களஅரசியல் வாதிகளின் இந்தப் போக்கு சித்திரித்துக்காட்டுகிறது.

திரு. தொண்டமானின் சமரச முயற்சிக்கும் அவரது தீர்வுத் திட்டத்திற்கும், பிரேமகும் அரசுக்கும் மத்தியில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெற்ற பொழுது எந்த உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காமல் பிரேமதாசா காலத்தைக் கடத்தி கழித்துவந்தார். கலந்தாலோசனை, கருத்தொற்றுமை, விட்டுக்கொடுப்பு என்ற தத்துவத்தைப் பேசி வந்தாரே தவிர தமிழரின் பிரச்சினைகளைப் பேசவில்லை அந்த நேரத்தில் புலிகளின் கோரிக்கைக்கு மாகாணசபை தேர்தலை நடத்தக்கூட அவர்முன் வரவில்லை.

தான முயற்சியும், அதற்கு எதிராக வெடித்த சிங்களப் பேரினவாத எழுச்சியும் இந்த அரசியல் உண்மையைப் எடுத்தியம்புகிறது.

நீண்டநெடுங்காலமாகதமிழ் மக்கள் சிந்திய இரத்தமும் கண்ணீரும், அவர்கள் அனுபவித்த தாங்கொணாத்துயரும், சிங்களப் பேரினவாதிகளின் மனதிலும் உணர்விலும் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

(முற்றும்)

## மத்திய கிழக்கு பிரச்சினைக்கு

# தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடவில்லை

**— அரபாத்**

(டில்லி)

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்கா உண்மையாக ஈடுபடவில்லை என பாலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற வைபவமொன்றில் சர்வதேச நீதிக்கும் சமத்துவ உறவுக்கும் ஆன முதலாவது இந்திரா காந்தி விருதைப்பெற்றுக் கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்றிட்டில் கடந்த அக்டோபரில் ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளவில்லை. அமெரிக்கா இன்னமும் இரட்டைவேடம் போடுகிறது. அமெரிக்காவை ஒரு நேர்மையான நடுநிலையாளராக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்படி இருந்தும் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே நாங்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

நவம்பர் மாதமளவில் உருப்படியான விளைவுகளை நாம் பெறவேண்டும். எது எப்படியிருப்பினும் நாங்கள் தொடர்ந்து சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவோம். ஏனெனில்சமாதானம் பொன் போன்றது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் உள்ள அரபுப் பிரதேசங்களைவிட்டுஇஸ்ரேல் வெளியேறாவிட்டால் மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படப் போவதில்லை என்று தெரிவித்தார்.

## நாணயம் வெளியிட ரஷ்யா தயார்

(மொஸ்கோ)

நாணயம் வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் ரஷ்யாவும் நாணயம் வெளியிடும் என ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ்யெல்சின் தெரிவித்துள்ளார்

உக்ரெயின் மற்றும் சோவியத்தின் முன்னாள் குடியரசுகள் புதிய நாணயமொன்றை வெளியிட உத்தேசித்துள்ளது. அவ்வாறு அவர்கள் நாணயம் வெளியிட்டால் தனது நாடும் வெளியிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஜோஷியின் யாத்திரையால் காஷ்மீரில் பதற்றம்

ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டு ஜம்முகாஷ்மீர் மாநிலத் தலைநகரமான சிறிநகர் நோக்கிச் சென்ற பாரதீய ஜனதாக் கட்சியினர் உத்தன்பூர் என்றுமிடம் சென்றுள்ளதாக தெரிகின்றது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறீநகர் நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் இரு இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

உத்தன்பூருக்கு அப்பால் யாத்திரை தொடர்வது தொடர்பாக முரண்பாடான செய்திகள் வந்துள்ளன. இன்று விமானப்படை ஹெலிக்கப்டர் மூலம் சிறீநகர் வந்து சேர்ந்து லால்சவுக் பகுதியில் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி கைது செய்யப்பட்டதாக வெளிவந்த செய்திகளை மாநில ஆளுநரின் ஆலோசகர் மறுத்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் சிறிநகரில் இடம்பெற்ற பொலிஸ் தலைமை நிலையத் தகர்ப்பையடுத்து சிறுநகரிலும் மாநிலத்தின் மற்றும் பல பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பல பாகத்திலும் பதற்றநிலை நிலவுவதாகவும் மக்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியே நடமாடுவதைக் காண முடியவில்லை எனவும் வீடுகளிலும் கூட ஜன்னல்கள் சாத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுவதாகவும் பி. பி. ஸி யின் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உடுத்துறை மகா வித்தியாலயத்தில்

# வகுப்புக்கள் ஆரம்பம்

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை மகா வித்தியாலயத்தில் காலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனையிறவுப் போரின் பின்னர் சில காலம் இயங்காதிருந்த இந்த மகாவித்தியாலயம் கடந்த 6ஆம் திகதி தொடக்கம் மருதங்கேணி அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் மாலை நேர வகுப்புக்களை நடத்தி வந்தது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் உடுத்துறை மகா வித்தியாலயம், தனது சொந்தக் கட்டடத்திலேயே காலை வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

இதனை விட நான்கு பாடசாலைகள் மாமுனை செம்பியன்பற்றுப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றன.

(36)

## பாதிப்பைத் தடுக்க சவுக்கு மரங்கள்

வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர்கோவிலில் காற்றினால் சூழலில் ஏற்படும் பாதிப்பினைத் தடுப்பதற்காக, சவுக்கு மரநடுகைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. கே.கேதீஸ்வரன் இத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

முதற் கட்டமாக நாகர் கோவில் மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் ஆயிரம் (1000) சவுக்கம் மரக்கன்றுகள் நடப்(ச)பட்டன.

(36)

## சுவிட்சர்லாந்தில்

# நரசிம்மராவ் - நவாப்ஷெரீப் சந்தித்துப் பேசுவர்

பாகிஸ்தான் பிரதமமந்திரி நவாப் ஷெரீப்பும். இந்தியப் பிரதமமந்திரி நரசிம்மராவும் சுவிட்சர்லாந்தில் சந்தித்துப் பேசுவார்கள் என இஸ்லாமாபாத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

டாவோஸில் இந்த மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மூன்று நாள் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் இவர்கள் இருவரும் காஷ்மீர் பிரச்சினை காரணமாக சீர்குலைந்திருக்கும் உறவுகளை பலப்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதங்களும், பயிற்சியும் வழங்குவதாகவும், பஞ்சாப் சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இந்தியா பாகிஸ்தானை குற்றஞ் சாட்டி வருகிறது.

இதே நோம் தமது பிரச்சினைக்குரிய சிந்து மாகாணத்தால் இந்திய ஊடுருவல் ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது.

## பிர. தீர்விற்கு பெண்கள் மாநாடு

(ரோம்)

உலகத் தலைவர்களின் நாற்பதுக்கு அதிகமான மனைவிமார்கள் அடுத்த மாதம் ஜெனீவாவில் கூடவுள்ளனர் எனவிவசாய அபிவிருத்திஐ நா சர்வதேச நிதியம் வெளியிட்டது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறிய கிராமப்புற பெண்களின் துயரங்கள் தறிந்து ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்காக ஜெனீவாவில் பெப்ரவரி 25, 26 ஆம் திகதி இவர்கள் கூடுகின்றனர்.

எகிப்திய ஜனாதிபதியின் மனைவி சுசன்முபாரக் துருக்கிய ஜனாதிபதியின் மனைவி சென்ராஒஸால், செனகல்ஜனாதிபதியின் மனைவி உட்பட ஒன்பது தலைவர்களின் மனைவியர் இந்தக்கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளனர்.

## வடமராட்சி கிழக்கில்

# உதவிப்பணம் பெறுவோர் அம்பனில் பெறவும்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள அரசாங்க மாதாந்த உதவிப் பணம் மற்றும் புற்றுநோய், கசம், தொழுநோய் ஆகியவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்கள் அம்பனில் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அவர்களுக்கான உதவிப் பணத்தினை அலுவலக நேரங்களில் பெறலாம் என மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு கடந்த கார்த்திகை மாதத்திற்கும் புற்றுநோய் கசம், தொழுநோய்க்கான உதவிப் பணம் பெறுபவர்களுக்கு, கார்த்திகை, மார்கழி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(36

ஈழநாதம்

# தொழிலாளர் சலுகைகளை நிராகரிக்க அனுமதியோம்

## பதினைந்து தொழிற் சங்கங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சலுகைகளை நிராகரிக்க நாம் அனுமதிக்கமாட்டோம் என்று பதினைந்து தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த இந்த பதினைந்து தொழிற்சங்கங்களும் இதனைத் தெரிவித்தன.

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை காரணமாக இலங்கைத் தேயிலைக்கு உலக நாடுகளில் கிராக்கி இல்லை. ஆகையால் தேயிலைவிற்பனை இல்லையென்று காரணம் காட்டி தோட்டத் தொழிலாளர்கள், ஊழியர்கள் உட்பட ஏனையோருக்கு வழங்கப்படவேண்டிய சம்பள உயர்வு, வாழ்க்கைச்செலவு புள்ளிப்படி ஆகியவற்றை நிராகரிக்க முடியாது. அதை எம்மால் அனுமதிக்க முடியாது என்றும் அச் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதற்கு தோட்டத் தொழிலாளர்களோ அல்லது அதன் சேவையாளர்களோ காரணம் அல்ல, தோட்டங்களில் உள்ள பிரச்சினைகள், குறைகள் ஆகியவற்றை தீர்ப்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறியுள்ளோம் என்றும்,

தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட சேவையாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடமைகளில் ஈடுபட்டுள்ள சகலருக்கும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒன்றுக்கு ஐந்து ரூபா வீதம் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளோம் என்றும் அச் சங்கங்கள் குறிப்பிட்டன.

இதே நேரம் கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நூறு ரூபா சம்பள உயர்வு கூட இன்னமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியாவில் தமிழர்களை சர்வோதயம் புறக்கணிப்பு

(வவுனியா)

வவுனியா சர்வோதய நிர்வாகத்தினரால் பாதிப்படைந்த தமிழ்மக்களுக்கு எதுவித உதவிகளும் செய்து கொடுக்கப்படுவதில்லை

வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் உதவிகள் யாவும் வவுனியா சிங்கள உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் வாழும் சிங்கள மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிர்வாகத்தில் பணிபுரியும் தமிழ் அதிகாரிகள் கூட தமிழ்மக்களுக்கு உதவிகள் வழங்குவது சம்பந்தமாக மௌனம் சாதித்து வருகின்றனர்.

சிங்களப் பகுதிகளில், கல்வி, மற்றும் பயிர்ச்செய்கை, நிவாரணஉணவுப்பொருள் விநியோகம் போன்ற உதவிகள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் தமிழ் மக்களுக்கு இந்த உதவிகள் எவையும் வழங்கப்படுவதில்லை. (தி)

## விமான டிக்கற்றுக்கள் களவாடி விற்பனை

(கொழும்பு)

எயர்லங்கா விமானக் கம்பனியில் இருந்து பயணச்சீட்டுக்களைக்களவாடி விற்பனை செய்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுபற்றித் தெரியவருவதாவது.

எயர்லங்கா விமானக் கம்பனியின் பயணச்சீட்டுப் புத்தகம் ஒன்றைத் திருடிய ஊழியர் ஒருவர் பிரயாண முகவர் ஒருவருக்கு விற்றாராம். முகவர்மூலம் விற்பனைசெய்து பணம் பெற்றுள்ளர். மேற்படி பிரயாணச்சீட்டுக்களைப் பெற்றவர்கள் ஏற்கனவே அவற்றைப் பயன்படுத்தி வெளிநாடு சென்றுவிட்டனர் என இப்பொழுதுதான் எயர்லங்கா நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

விசாரணையை மேற்கொண்ட இரகசியப் பொலிஸார் சம்பந்தப்பட்ட ஊழியர் உட்பட மூவரையும் கைது

## சீனன்குடாவில் மேலும்மூன்று சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

சீனன்குடா விமானப்படைத்தளத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பின் இடிபாடுகளை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புபடையினர் மேலும் மூன்று சடலங்களை கண்டெடுத்துள்ளனர். இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று பெண்ணினுடையதாகும். கடந்த செவ்வாயன்று துப்பரவுப் பணியில் பயன்படுத்துவதற்கென திருக்கோணமலைக்கு 'கிரேன்' ஒன்று கொண்டு செல்லப்பட்டுள்ளது

மீட்கவந்த

## ஜப்பானிலிருந்து போக்குவரத்து கண்காணிப்புகுழு

(கொழும்பு)

சிறிலங்காவில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் பற்றி ஆராய ஜப்பானிலிருந்து போக்குவரத்து கண்காணிப்பு நிபுணர்களின் தூதுக்குழுவொன்று வந்துள்ளது. ஆறு பேரைக் கொண்ட இத்தூதுக்குழுவினர் கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களில் அமுல்படுத்தப்படும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் பற்றி விசேடமாக ஆராயவுள்ளனர்.

## பிரிட்டன் உதவி

(கொழும்பு)

வட. கிழக்கிலுள்ள அகதி முகாம்களுக்கு அவசியமாக தேவைப்படும் மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக பிரித்தானியா அரசாங்கம் யுனிசெப் மூலம் முப்பத்தியட்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

கடந்த வருடமும் பிரித்தானியா ஐம்பதினாயிரம் பவுண் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆயுதமுனையில் கொள்ளை தெற்கில் அதிகரிப்பு

(நமது நிருபர்)

ஆயுத முனையில் கொள்ளையடிக்கும் நடவடிக்கை தென் பகுதியில் திடீரென அதிகரித்துள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பதுளை ஸ்பிரிங் வெளி ஆறாவது டிவிஷன் தோட்டத்தில்உள்ள பல வீடுகளில் கடந்த இருபத்திமூன்றாம் திகதி முகமூடி அணிந்த ஆயுதபாணிகள் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்துள்ளனர்.

பொலிஸார் வந்திருப்பதாகக் கூறி வீட்டுக் கதவுகளைத் திறக்க வைத்தே மேற்படி துணிகரக் கொள்ளை நடாத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பேலியாகொடையில் உள்ள வீடொன்றில் புகுந்த ஆயுதபாணிகள் மூவர் 47,000 ரூபா ரொக்கப் பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

அன்றைய தினம் மாலை மூன்று மணியளவில் பாதுக்க மீகொடை என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் 39,509 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் அதிகாலை ஹிங்குராக்கொடையில் பெர்னான்டோ என்பவரது வீட்டிற்குள் புகுந்த ஆயுதம் தரித்த மூவர் துப்பாக்கி முனையில் 69,250 ரூபாவைக் கொள்ளையடித்துள்ளனர். இங்கினியாகலையில் 19,055 ரூபாவை சமரசேகரா என்பவரிடமிருந்து துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துள்ளனர், இதேவேளை மாளிகாவத்தையில் பாலகுமார் என்பவரிடமிருந்து 23,920 ரூபா திருடப்பட்டுள்ளது. மேற்படி கொள்ளையரைத் தேடிப் பொலிசார் பல பகுதிகளிலும் வலை விரித்துள்ள போதிலும் இதுவரை எவரும் கைதாகவில்லை.

இவ் இரு நாட்களில் மட்டும் ஐந்து இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒப்பந்தம் மீள் பரிசீலனை

(கொழும்பு)

ஒலிபரப்புச் சேவையைத் தவிர வேறு எந்தவொரு நடவடிக்கையிலும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' அலை கடத்தி நிலையம் ஈடுபடக்கூடாதென்பதைஉறுதிசெய்துகொள்வதற்காக அண்மையில் அமெரிக்க அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அரசு மீளாய்வுசெய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பிராந்தியத்திலுள்ள எந்தவொரு நாட்டிற்கும் தீங்கிழைக்கக் கூடிய வகையில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிலையம் இயங்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' புனிதத்தன்மை கெட்டுவிடும்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்திலுள்ள இரணவில பகுதியில் அமெரிக்க தகவல் சேவையான வொய்ஸ் ஒப் அமெரிக்க நிலையம் அமைக்கப்படுவதன் மூலமாக அப்பிரதேசத்தின் புனிததன்மை கெட்டுவிடக் கூடுமென்றும், பிரதேச மக்களின் சுயமான கலை, கலாசார பாரம்பரிய பண்பாட்டிற்குப் பங்கம் ஏற்படலாமென்றும் அப்பகுதி மக்கள் கருதுகின்றார்கள். இவ்வாறு பி.பி.ஸியின் சிங்கள ஒலிபரப்பாகிய சந்தேசிய சேவைக்கு பேட்டி வழங்கிய வண. பிதா ஏர்னஸ்ட் சோமசிறி தெரிவித்தார். கடந்த ஐந்து வருடகாலமாக இப்பகுதியில் குருத்துவப் பணியாற்றும் இவர் மேலும் கூறுகையில் அரசும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையமும் வழங்குவதாக கூறும் வேலைவாய்ப்பு மற்றும் வசதிகள் என்பவற்றைக் காட்டிலும் வெளியாரின் வரவு அதிகரிக்கும் போது தமது பாரம்பரிய வாழ்க்கை பாதிக்கப்படும் என்ற அச்சமே இப் பிரதேச மக்களிடம் மேலோங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## அமெரிக்கா பகை நாடல்ல

### யெல்சின்

அமெரிக்க நகரங்களை நோக்கிய திசையில் இனிமேல் ரஷ்ய ஏவுகணைகள் ஒன்றாவது நிறுத்திவைக்கப்படமாட்டாது என்று ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் கூறியுள்ளார். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவை ஒரு பகை நாடாக ரஷ்யா இனிமேலும் கருதாதுஎனவும் தெரிவித்தார்

# அரச வங்கிகளின் பணிகள் வர்த்தக மயமாக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் ஆலோசனையின்பேரில் இலங்கைவங்கி மற்றும் மக்கள்வங்கியின்மூலம் ஆற்றப்படும் பல்வேறு பணிகள் வர்த்தக மயமாக்கப்படவுள்ளன. வர்த்தக மயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்த இரு

யார் மயப்படுத்துவது சாத்தியப்படாது என்றும் அதேவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வங்கிகளின்மீதுள்ள கட்டுப்பாடுகளைத்தளர்த்தி முதலில் மக்கள்வங்கியையும், இலங்கை வங்கியையும் வர்த்தகமயமாக்க அரசு திட்டமிட்டுள்

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வங்கிகளில் ஆள் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, ஒரு நகரில் ஒரு வங்கி மாத்திரம் இயங்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்

### தமிழ்

கின்றனர். பின்னர் அவர்கள் எண்ணிக் கணக்கெடுக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நோக்கி செல்லும் ரயிலில் மட்டுமே இவ்வாறு செய்யப்படுவதாகவும் கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலில் கடும் சோதனை மட்டும் செய்வதாகவும் தெரிய வருகிறது.

### திருமலை

பிட்டது.

இந்த நிலைமைகளை எத்தனையோ சர்வதேச நிறுவனங்கள் எடுத்துக்கூறியபோதும் சிறிலங்கா அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை மீளவும் வரவழைப் பதிலேயே மிகுந்த கவனம் கொண்டுள்ளது. மேலும் கூறுகையில் யாழ்ப்பாணப் பகுதியில் இராணுவ நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டால் பெருமளவு அகதிகள் மீண்டும் தமிழகத்திற்குச் செல்லக் கூடும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

### அரசாங்கம்

காலச் சம்பவங்களை வைத்துப் பார்க்கையில் மலையகத்தில் புலிகள் ஏற்கனவே ஊடுருவியிருப்பதை அவதானிக்க முடிகிறது எனவும், இதுபற்றி அமைச்சர் தொண்டமானும், ஜனாதிபதியும் மிக விழிப்புடன்

கள மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிர்வாகத்தில் பணி தமிழ் மக்களுக்கு இந்த உதவிகள் எவையும் வழங்கப்படுவதில்லை. (தி)

## விமான டிக்கற்றுக்கள் களவாடி விற்பனை

(கொழும்பு)

எயர்லங்கா விமானக் கம்பனியில் இருந்து பயணச்சீட்டுக்களைக்களவாடி விற்பனை செய்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது பற்றித் தெரியவருவதாவது.

எயர்லங்கா விமானக் கம்பனியின் பயணச்சீட்டுப் புத்தகம் ஒன்றைத் திருடிய ஊழியர் ஒருவர் பிரயாண முகவர் ஒருவருக்கு விற்றாராம்.

இந்த முகவர் எட்டுப் பிரயாணச்சீட்டுக்களை வேறு ஒரு முகவர்மூலம் விற்பனைசெய்து பணம் பெற்றுள்ளர். மேற்படி பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றவர்கள் ஏற்கனவே அவற்றைப் பயன்படுத்தி வெளிநாடு சென்றுவிட்டனர் என இப்பொழுதுதான் எயர்லங்கா நிறுவனம் கண்டுபிடித்துள்ளது

விசாரணையை மேற்கொண்ட இரகசியப் பொலிஸார் சம்பந்தப்பட்ட ஊழியர் உட்பட மூவரையும் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி உயர்வில் முறைகேடு; இன்ஸ்பெக்டர்கள் எதிர்ப்பு

செயற்கரிய செயல்களில் ஈடுபட்டபொலிஸ் இன்ஸ்பெக்டர்களைவிட விசேட பணிகளில் ஈடுபடாதவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சிறிலங்கா அரசுக்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர்.

அண்மையில் 72 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றது தெரிந்ததே.

ஆரம்பத்தில் சுமார் நூறு பேர் வரையிலேயே பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கபபட்டிருந்தனர். எனினும் எதிர்ப்புகள் கிளம்பியதையடுத்துஐந்நூறுக்கும் அதிகமான பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அழைக்கப்பட்டனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பம்பலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது இந்தப் பதவி உயர்வுசம்பந்தபபட்ட விடயங்களும் ஆராயப்படவிருந்ததாக தெரிய வருகின்றது.

## மட்டக்களப்பில் 319 பேர் பயிலுனர்ஆசிரியராகதெரிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 319 தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிலுனர் ஆசிரியர் நியமனங்களை வழங்க வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான முதல் பட்டியலில் 'ஏ', 'பி' பிரிவிற்குரிய 433 பேரில் கல்விச் சேவைகள் ஆணைக்குழு 420 பேருக்கு மேற்படி நியமனத்திற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்றும்,

இவர்களுள் பூரண விலாசம் கொடுக்கப் பட்டதும், எதிர்ப்புகள் தெரிவிக்கப்படாததுமான 319 பேருக்கு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூரண விலாசம் கொடுக்கப் படாதோரின் விலாசம்கிடைக்கப்பெற்றதும் அவர்களுக்குரிய நியமனங்கள் வழங்கப்படும் என்றும்,

மேன்முறையீடு செய் தவர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அநுராவும் இந்தியா பயணம்

(கொழும்பு)

பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா மிகவிரைவில் திருவனந்தபுரத்துக்கும், பங்களூருக்கும் செல்லவிருக்கிறார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

சீனன்குடா விமானப்படைத் தளத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பின் இடிபாடுகளை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப்படையினர் மேலும் மூன்று சடலங்களை கண்டெடுத்துள்ளனர். இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று பெண்ணினுடையதாகும். கடந்த செவ்வாயன்று துப்பரவுப் பணியில் பயன்படுத்துவதற்கென திருகோணமலைக்கு 'கிரேன்' ஒன்று கொண்டு செல்லப்பட்டுள்ளது

### மீட்கவந்த

களையும் அனுப்பிவைத்ததாகவும் சிறிலங்காபாதுகாப்புவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### கிராம

30 ரூபா அலவன்சு 100 ரூபா உயர்த்தப்படுவதாகவும் தெரியவருகின்றது.

### மருந்து விலை

மேற்படி முடிவெடுக்கப்பட்டது. இதன்படி மருந்து வகைகள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கப்படும் என்றும், மருந்துகளின் விலை உள்ளடக்கிய பட்டியல் பார்வைக்கு வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த மருந்துகளின் விலை வேறுபடும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் ஆங்கில மருந்து வர்த்தகர் பலர் தாம் விரும்பிய விலைக்கே மருந்துகளை விற்பதாக பாவனையாளர் புகார் தெரிவிக்கின்றார்கள்.

மருந்துவகைகளை இலங்கை மருத்துவ சபையின் பதிவுசெய்யப்பட்ட டாக்டர்களின் சிட்டைகளுக்கே விற்கப்படவேண்டும் என்றநிபந்தனையும் மீறப்பட்டு மருந்துகள் எல்லோருக்கும் தாராளமாக விற்கப்படுகின்றன என்று யாழ் தனியார் மருத்துவ மனையொன்றின் மூத்த டாக்டர் கவலை தெரிவிக்கிறார்.

### மலையகத்தில்

தேசசெஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பொலிஸ் நிலையங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து தகவல்களைப் பெற்று வருகின்றனர்.

இதுவரை பெறப்பட்ட தகவல்களின்படி கைது செய்யப்பட்ட 40 பேர் கொழும்பு ''மகஸீன்'' சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். நான்கு பெண்கள் உட்பட ஒன்பது பேர் தொடர்ந்தும் பதுளையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அதேவேளை கைது செய்யப்பட்ட சிலரின் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.

யின் சிங்கள ஒலிபரப்பாகிய சந்தேசிய சேவைக்கு பேட்டி வழங்கிய வண. பிதா ஏர் மேலோங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

யில், அமெரிக்காவை ஒரு பகை நாடாக ரஷ்யா இனிமேலும் கருதாதுஎனவும் தெரிவித்தார்

னங்கள் எடுத்துக்கூறியபோதும் சிறிலங்கா அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை மீளவும் வரவழைப் பதிலேயே மிகுந்த கவனம் கொண்டுள்ளது. மேலும் கூறுகையில் யாழ்ப்பாணப் பகுதியில் இராணுவ நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டால் பெருமளவு அகதிகள் மீண்டும் தமிழகத்திற்குச் செல்லக் கூடும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

# அரச வங்கிகளின் பணிகள் வர்த்தக மயமாக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் ஆலோசனையின்பேரில் இலங்கைவங்கி மற்றும் மக்கள்வங்கியின்மூலம் ஆற்றப்படும் பல்வேறு பணிகள் வர்த்தக மயமாக்கப்படவுள்ளன. வர்த்தக மயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்த இரு வங்கிகள் மீதும் நடைமுறையில் உள்ள திறைசேரியின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வர்த்தக மயமாக்கல் வங்கிகளைத் தனியார் மயமாக்குவதற்கான முன்னோடி நடவடிக்கையென்றும் சொல்லப்படுகிறது. பங்குச் சந்தை. நடைமுறையில் உள்ள நிதியியல் கொள்கை காரணமாக வங்கிகளை உடனடியாகத் தனியார் மயப்படுத்துவது சாத்தியப்படாது என்றும் அதேவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வங்கிகளின்மீதுள்ள கட்டுப்பாடுகளைத்தளர்த்தி முதலில் மக்கள்வங்கியையும், இலங்கை வங்கியையும் வர்த்தகமயமாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதை நடைமுறைப் படுத்த அரசு வங்கி அதிகாரிகள் தொழிற்சங்கம், வங்கி ஊழியர்தொழிற்சங்கம், அரசு சார்பு ஜாதிக்க சேவா சங்கமய ஆகிய சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வங்கிகளில் ஆள் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, ஒரு நகரில் ஒரு வங்கி மாத்திரம் இயங்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. ஒரு நகரத்திற்கு ஒரு வங்கி என்ற திட்டம் போன டிசம்பரில் நடைமுறைப்படுத்தப்படவிருந்து பின்பு பிற்போடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### அடுத்த

இதேவேளை புலிகளைப் பலவீனப்படுத்தும் இராணுவ நடவடிக்கைகளைஎப்பொழுது ஆரம்பிப்பதுஎன்பது குறித்தே சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் தீவிர ஆலோசனை நடைபெற்று வருகின்றது. மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்தின் மீது எழுந்துள்ள கண்டனங்களும், உதவி வழங்கும் நாடுகளின் பரிஸ் மாநாடு அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறவுள்ளமையும் இராணுவ நடவடிக்கையை எப்பெழுது எங்கே ஆரம்பிப்பது என்பது குறித்து தீவிரமாக ஆலோசனைகள் இடம் பெறுவதாகவும் தெரிய வருகிறது.

### பதவி

சரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைதீர்வுக்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு எல்லோரும் யோசனைகளைச் சமர்ப்பிக்க உரிமை உண்டு. அமைச்சர் தொண்டமான் யோசனைகளைச் சமர்ப்பித்தமைக்காக அவரை வெளியேற்றுவதன் மூலம் இந்த நாட்டின் ஒரு பகுதி பிரிவதைத் தடுக்க முடியுமா? என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார். தொண்டமானையே குறை கூறிக் கொண்டிருப்போமானால் நாம் மோசமான நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## 43-து இந்திய குடியரசுதினம் நேற்று கொண்டாடப்பட்டது

(டில்லி)

இந்தியாவின் 43 வது குடியரசு தினவிழா நேற்றுகொண்டாடப்பட்டது. டில்லியில் குடியரசு தினவிழா தொடர்பான வைபவங்கள் இடம் பெற்றன.

முப்படைகளினதும் அணிவகுப்பு மரியாதையை இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் ஏற்றுக்கொண்டார். விழாவில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்து கொண்டு உரையாற்றினார். குடியரசு தின விழாவின் பிரதம விருந்தினராக போர்த்துக்கல் பிரதமர்கலந்து கொண்டார்.

## பார.ஜனதா தலைவர்ஜோஷி சிறிநகரில் கொடிஏற்றினார்

(காஷ்மீர்)

பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி காஷ்மீரின் தலைநகர் சிறிநகரில் இந்திய தேசியக் கொடியை நேற்று ஏற்றி வைத்தார்.

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர்வரை சமாதான யாத்திரையை மேற்கொண்டிருந்த அவர் இந்திய குடியரசு தினமாகிய நேற்று திட்டமிட்டபடி காஷ்மீரில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

பலத்த இராணுவ காவல் மத்தியில் இடம் பெற்ற இந்த நிகழ்ச்சி நடைபெற்ற மைதானத்திற்கு அருகில் இரண்டு எறிகணைகள் விழுந்து வெடித்ததாகவும், அதனல் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிகழ்ச்சிகள் முடிந்ததும் ஜோஷி விமானத்தில் ஏறும் வேளை அதனைநோக்கி காஷ்மீர் தீவிரவாதிகளால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

### தாக்க

வத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இப்பதில் தாக்குதலினால் சிறிலங்கா இராணுவ தரப்பில் பலத்த இழப்பு ஏறபட்டது. புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இந்தப் பதில் தாக்குதலில் வீரச்சாவை அடைந்த வீரவேங்கை பட்டாபிக்கு (முறக்கொட்டாஞ்சேனை) விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### கெரில்லா

காலை 6 மணியளவில் இடம் பெற்ற சம்பவத்தில் வீரவேங்கை கணேஸ் (சுந்தரலிங்கம்-பாண்டிருப்பு, கல்முனை) வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டம் குருமன்வெளியில்இடம்பெற்ற சம்பவத்தில் வீரவேங்கை குயிலன் அல்லது தவேந்திரன் (கந்தையா சத்தியா பார் கோட் மட்டக்களப்பு) வீரச்சாவை தழுவிக்கொண்டார். இவ் இரு வீரவேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### அரசாங்கம்

காலச் சம்பவங்களை வைத்துப் பார்க்கையில் மலையகத்தில் புலிகள் ஏற்கனவே ஊடுருவியிருப்பதை அவதானிக்க முடிகிறது எனவும், இதுபற்றி அமைச்சர் தொண்டமானும், ஜனாதிபதியும் மிக விழிப்புடன் செயற்படவேண்டியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டமான்இ.தொ. காவின் தலைவர் என்பதும், ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றை இச்சங்கம் கொண்டது என்பதும், மலையகத்தில் இ. தொ. கா பலம் வாய்ந்த தொழிற்சங்கம் என்பதும் கவனிக்கப்படவேண்டியதே எனச் சுட்டிக்காட்டியுள்ள மேர்வின் டி. சில்வா அவர்கள் சிறிமாவோ-சாத்திரி உடன்பாடு, சிறிமாவோ-இந்திரா உடன்பாடுஎன்பவற்றின் மூலமே குடியுரிமை பெற்றவர்கள் மலையகத் தமிழ் மக்கள் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பித்த யோசனைகளைத் தொண்டமான் பகிரங்க விவாதத்திற்கு வெளியிட்டமை ஒரு தவறான முன்னுதாரணம் எனவும் மேர்வின் டி. சில்வா கூறியுள்ளார்.

### ஐ. நா. அக.

மட்டுப்படுத்தப்பட்டது என்று சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன்வீரக்கோன் தெரிவித்தார்.

வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் தமிழகத்திலுள்ள அகதி முகாம்களுக்கு ஐ. நா. அகதிகள் தூதுவராலய அதிகாரிகள் நேரில் விஜயம் செய்ய இந்திய அரசு அனுமதி மறுத்திருப்பதாக தெரிவித்தார். இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளின் பாதுகாப்பு மற்றும் கெளரவம் தொடர்பாக ஐ. நா. அகதிகள் தூதுவராலயம் அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா என்ற பிறிதொரு கேள்விக்கு அவ்வாறில்லை எனக் கூறிய பிரட்மன்வீரக்கோன் அகதிகள் தாமாகவே நாடுதிரும்புகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது அதற்காக ஐ நா. அகதிகள் தூதுவராலயம் ஈடுபடுவதை அரசு விரும்புகிறது என விளக்கமளித்தார்.